**பாட இலக்கம் : 12**

**செயலட்டை இல : 07**

**01.இடைவெளிக்குப் பொருத்தமான உவமைத் தொடர்களைத் தெரிவு செய்க.**

1. இளமையிற் பெறும் கல்வி ..................... நன்கு நிலைக்கும்.
    1. நீர் மேல் எழுத்துப் போல  2. காட்டில் எறிந்த நிலவு போல
    3. கல்லின் மேல் எழுத்துப் போல
2. .............. உதவி செய்தவனையே ஒழித்துக் கட்டினான் காந்தன்.
    1. தீட்டிய மரத்தில் கூர்மை பார்ப்பது போல  2. தூண்டு சுடர் போல
    3. பாம்புக்கு பால் வார்த்தாற் போல
3. தமையனும் தம்பியும் .............. எந்நாளும் சண்டையிட்டனர்.
    1. நல்ல மரத்தில் புல்லுருவி போல  2. மதில் மேல் பூனை போல
    3. கீரியும் பாம்பும் போல
4. ............ மாறன் உரையாற்றினான்.
    1. மடை திறந்த வெள்ளம் போல  2. குன்று முட்டிய குருவி போல
    3. காந்தம் இரும்பைக் கவர்வது போல
5. செல்வம் .................... நிலையில்லாதது.
    1. அடியற்ற மரம் போல  2. நீர்க்குமிழி போல  3. சூரியனைக் கண்ட இருள் போல

**02.கீழ்வரும் உவமைத்தொடர்களுக்கு பொருள் எழுதுக.**

1. இலவு காத்த கிளி போல -
2. ஒளியைக் கண்ட இருள் போல -
3. பெட்டிப் பாம்பு போல -
4. சாடிக்கு ஏற்ற மூடிப் போல -
5. வேலி பயிரை மேய்ந்தாற் போல -